செ.வெ.எண்: 467/2020 நாள்: 18.10.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்களை இந்திய குடிமைப்பணி தேர்வு-2020 தேர்வில் வெற்றிபெற்ற திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி கவேரிப்பட்டு கிராமத்தை சேர்ந்த செல்வி.உ.சூர்யா அவர்கள் சந்தித்து பரிசு மற்றும் பாராட்டுகளை பெற்றார்கள்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்களை இந்திய குடிமைப்பணி தேர்வு-2020 தேர்வில் வெற்றிபெற்ற திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி கவேரிப்பட்டு கிராமத்தை சேர்ந்த செல்வி.உ.சூர்யா (வயது-29) அவர்கள் சந்தித்து பரிசு மற்றும் பாராட்டுகளை பெற்றார்கள்.

மேலும் 2012 ஆம் ஆண்டு அண்ணா பல்கலை கழகத்தில் B.Tech (Food Technology) பி.டெக் உணவு தொழில்நுட்பம் பட்ட படிப்பை முடித்துள்ளார்கள். 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை ஜவஹர்லால் பல்கலை கழகத்தில் முதுகலை பட்டம் (International Relation) பன்னாட்டு உறவுகள் என்ற படிப்பை முடித்துள்ளார்கள். 2018 ஆண்டு முதல் 2020 வரையில் பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்துள்ளார்கள். நான் தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்துகொண்டே இந்திய குடிமைப்பணி தேர்வில் வெற்றிபெற்றுள்ளேன் என்பதால் நீங்களும் பணிபுரிந்துகொண்டு குடிமைப்பணி தேர்வில் வெற்றிபெறலாம் என செல்வி.உ.சூர்யா (வயது-29) அவர்கள் தெரிவித்தார்கள்.

நமது மாவட்டத்திலிருந்து இன்னும் அதிகமான நபர்கள் இந்திய குடிமைப்பணி தேர்விற்கு தன்னை தயார்படுத்திக்கொண்டு பட்டதாரிகள் தேர்வை எதிர்கொண்டு வெற்றிபெற வேண்டும் எனவும் நான் பணியில் சேர்ந்த பிறகு மக்களின் முன்னேற்றத்திற்காக மட்டும் பணிபுரிவேன் என இந்திய குடிமைப்பணி தேர்வு-2020 தேர்வில் வெற்றிபெற்ற திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி கவேரிப்பட்டு கிராமத்தை சேர்ந்த செல்வி.உ.சூர்யா (வயது-29) அவர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**